(This question paper contains 3 printed pages)

Roll No.

Sl. No of Question Paper: 5186

Unique Paper Code: 208161

E

Name of the Paper: Functional Grammar and Skilkof Language

Name of the Course: B. A. (Prog.) Tamil A

Semester: I

Duration: 3 Hours. Max. Marks: 75

I. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 15

1. முதலெழுத்துகள் என்றால் என்ன? விளக்குக.
2. சார்பெழுத்துகள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
3. தமிழில் உச்சரிப்பு வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றுக்கும் ஒரு சான்று தந்து விளக்குக.
4. பின் வரும் சொற்களைப் பொருளுணர்ந்து வாக்கியங்களில் அமைக்க:

   அரம் – அறம்

   கலம் – களம்

   வாளி – வாழி

   பானம் – பாணம்

   ஈந்தாள் – ஈன்றாள்
5. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளைச் சான்று தந்து விளக்குக.

II. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடைதருக. 10

1. இலக்கண வகைச் சொற்களை விளக்குக.
2. இலக்கிய வகைச் சொற்களை விவரிக்க.
3. இயற்சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக.

III. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடைதருக. 10

1. செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்கள் – இவை பற்றி விளக்குக.
2. உடன்பாட்டு, எதிர்மறை வாக்கியங்கள் – இவை பற்றி விளக்குக.
3. வினா, கட்டளை வாக்கியங்கள் – இவை பற்றி விளக்குக.

IV. உரையாடலின் போது உரையாடுவோர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை விளக்குக. 10

(அல்லது)

P.T.O

பேருந்தில் பயணிக்கும் போது உடன் அமர்ந்திருக்கும் பயணி ஒருவரோடு மேற்கொள்ளும் ஓர் உரையாடலை எழுதுக.

V. பத்தியின் அமைப்பை விவரிக்க. 10

(அல்லது)

தீபாவளிப் பண்டிகை குறித்து ஒரு பத்தி வரைக.

VI. கடிதத்தின் வகைகளை விவரிக்க. 10

(அல்லது)

உமக்குத் தேவையான நூல்களை அனுப்பித் தரும்படி சென்னையிலிருக்கும் ஒரு பதிப்பகத்தார்க்கு ஒரு கடிதம் எழுதுக

VII. கீழ் வரும் பத்தியைச் சுருக்கி வரைக. 10

அன்புடைய இருவர் முற்பிறப்பின் நல்வினையால் எதிர்ப்பட்டு அன்பினால் உள்ளம் ஒத்து நெஞ்சு கலத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர். தலைவன் தலைவி ஆகியோரின் உள்ளக் குறிப்பு, முயற்சி இவற்றால் அன்றி, தன்னியல்பில் நிகழ்ந்ததாதலால் இதனை 'இயற்கைப் புணர்ச்சி' என்று கூறுவர். இவ் இயற்கைப் புணர்ச்சியில் தல்லவனைக் கண்டு அன்பினால் நெஞ்சு கலந்த தலைமகள் வீட்டை விட்டு வெளியே செல்லாதபடி பெற்றோரால் காக்கப்படுகிறாள். இந் நிலையில் தலைமகளைக் காணாமல் வருந்திய தலைவன் அவளிடம் கொண்ட அன்பினால் யாரும் அறியாதபடி நள்ளிரவில் அவளைக் காண வருகிறான். ஊர்க்காவலர் வரவினாலும் நாய் குரைத்தலாலும் வீட்டிலுள்ளோர் விழித்துக் கொண்டதாலும் தலைவியைக் காணும் வாய்ப்பை இழந்து போகிறான். இவ்வாறு தினந்தோறும் இரவில் வந்து போகும் தலைவனை நினைத்து வருந்துகிறாள் தலைவி. தலைவன் தன்னை மணந்து கொள்ளாமல் இரவில் தன்னைக் காண வந்துபோகும் களவின் துயரத்தையும் வழியில் அவன் அனுபவிக்கும் துன்பத்தையும் எண்ணிக் கலங்குகிறாள். அதனால் அவள் மேனி வாட்டமுறுகின்றது. தலைவியின் வாட்டத்தைச் செவிலி காண்கிறாள். இவள் உடல் திடீரென இப்படி மெலிவதற்கான காரணத்தை எண்ணுகின்றாள். குறி சொல்வோரை அழைத்துக் குறி கேட்டு, அதற்கேற்ப முருகக்

P.T.O

கடவுளுக்கு வழிபாடு நடத்துகிறாள். அப்படியும் தலைவியின் நோய் தணியவில்லை. செவிலி மிகவும் வருத்தமுறுகிறாள். அந் நிலையில் தோழியானவள் செவிலியிடம், தலைமகன் ஒருவனோடு தலைவிக்கு ஏற்பட்டுள்ள நட்பையும் அதனால் தலைவியின் மனதில் உயிரினும் மேலான கற்பு அழியாமல் இருப்பதையும் கூறுகின்றாள். தலைவன், தலைவி இருவரும் சந்தித்த முறை, அவ்விருவர் உள்ளத்திலும் அறத்தின் வழிப்பட்ட நற்செயலை அறிவுறுத்தும் களவு வெளிப்படுகின்ற முறையைத் தோழி செவிலிக்குக் கூறுகின்றாள். இது 'அறத்தொடு நிற்றல்' எனப்படுகின்றது.